## சுதேச மருத்துவத்துறை அமைச்சு

# இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

ஆண்டறிக்கை - 2013

# ஆண்டறிக்கை - 2013

# உள்ளடக்கம்

கௌரவ தலைவரின் செய்தி

| | | |
|---|---|---|
| ( 01 ) | பணிப்பாளர் சபை அறிக்கை | 01 - 13 |
| ( 02 ) | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 14 - 29 |
| ( 03 ) | கணக்குக் கொள்கைகள் | 30 - 34 |
| ( 04 ) | ஐந்தொகை | 35 |
| (05) | உற்பத்தி விற்பனைகள் மற்றும் இலாப நட்ட கணக்குகள் | 36 - 37 |
| ( 06 ) | நிதிப் பாய்ச்சல் கூற்று | 38 |
| (07) | கணக்குகள் தொடர்பான குறிப்புகள் | 39 |
| (08) | கணக்குகளுக்கான குறிப்புகள் | 40 - 41 |

**தலைவர் அவர்களின் செய்தி**

2013 ஆம் ஆண்டில் இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றங்கள் தொடர்பில் செய்தியொன்றை வெளியிடுவதற்கான சந்தர்ப்பமொன்று கிடைத்தமையிட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

44 வருட நீண்ட வரலாற்றைக் கொண்ட இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நான் 2007 ஆம் ஆண்டு அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டேன். அதிலிருந்து நட்டம் அடைந்து கொண்டிருந்த இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தை இலாபமீட்டும் நிலைமைக்கு கொண்டுவர நான் உட்பட எனது பதவியணியினர் இரவு பகல் பாராது அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம்.

இதன் பெறுபேற்றின் காரணத்தினால் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலாபமீட்டும் அரசாங்க கூட்டுத்தாபன வகுதிக்குள் உள்ளடக்குவதற்கு எமக்கு முடியுமாயின. உள்நாட்டு மருத்துவ முறையை மேம்படுத்துவதற்காக மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொண்ட எமது நிறுவனமானது குடிசை தொடக்கம் மாடி வரையிலான நோயாளிகளை குணப்படுத்துவதற்கு பாரிய பணிகளை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறான பணிகளின் போது பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டதுடன் பண்புசார் மூலப்பொருட்களின் தேவைப்பாட்டை பெற்றுக் கொள்ளல், கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் மற்றும் முடிவுறுத்தப்பட்ட பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் இல்லாமை இவற்றுள் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இதற்கான தீர்வாக நாம் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் கௌரவ சாலிந்த திசாநாயக்க அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஆதிவாசிகளின் சகல கிராமங்களையும் ஒருங்கிணைத்து அவர்களினால் வழங்கப்பட்ட மூலப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் களஞ்சியசாலைப் பிரச்சினைக்குத் தீர்வாக தற்பொழுது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நான்கு மாடிக் களஞ்சியசாலைக் கட்டடத் தொகுதியின் நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பதற்குத் தேவையான பொறித்தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கான நிதி ஏற்பாடுகளை பொதுத் திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

30 வருட காலமாக நிலவிய யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்தும் எம்மிடம் மருந்துகளுக்கான கேள்விகள் அதிகரித்தன. இதற்கமைவாக நிலவுகின்ற உற்பத்தி ஆற்றலின் கீழ் எமது சந்தையின் கேள்விகளுக்கு ஏற்றவாறு தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கான உற்பத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் தொடர்பாக எனதும் பணிப்பாளர் சபையினதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் தற்பொழுது முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் தேவையான பொறிமுறைகளை இறக்குமதி செய்வதற்கு எதிர்வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறான பல பிரச்சினைகளுக்கும் மத்தியில் ஊழியர்களின் சேவை அர்ப்பணிப்பு மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்படுத்தி இலாபமீட்டும் கூட்டுத்தாபனமாக முன்னோக்கிச் செல்வதையிட்டு நாம் பெற்ற பாக்கியமாகக் கருதுகின்றேன்.



**டி.டி.சோமவீர சந்திரசிறி**

தலைவர்,

இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம்.

**<u>2013 ஆம் ஆண்டிற்கான இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையின் அறிக்கை</u>**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 142 ஆம் பிரிவிற்கு அமைவாக 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் அறிக்கையை கௌரவ சுதேச மருத்துவத் துறை அமைச்சருக்கு பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

**(01) அறிமுகம்**

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் நிதிக் கூட்டுத்தாபனத்தின் சட்டத்தின் கீழ் 1969 ஆம் ஆண்டின் மே மாதம் 11 ஆம் திகதியுடைய 14853/3 இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் அப்போதிருந்த கௌரவ கைத்தொழில் மற்றும் மீன்பிடித்துறை தொடர்பான அமைச்சரினால் இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது.

**(02) நோக்கு**

ஆரோக்கியமான மக்கள் சமுதாயத்தின் பொருட்டு தேசிய மருத்துவவியலின் அடையாளத்தைப் பேணி தேசிய மற்றும் சர்வதேச மருந்துகளின் தேவைகளை பூரணமாக்கி தரமான சேவைகளை வழங்கும் முன்னோடி நிறுவனமாதல்.

**(03) செயற்பணி**

உயர் தரத்துடனான் ஆயுர்வேத மருந்து உற்பத்தி, இறக்குமதி, விநியோகித்தல், ஆராய்ச்சி சேவைகளை வழங்குதல் மற்றும் இதனைப் பாதுகாப்பதன் மூலம் மக்கள் தேவைகளை பூர்த்தியாக்குவது மட்டுமன்றி ஊழியர் அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் சமூக நலன்களை நிறைவேற்றி ஆரோக்கியத்துடனான மக்கள் சமுதாயத்தின் பொருட்டு முன்னோடியாகச் செயற்படுதல்.

**(04) பிரதான நோக்கங்கள்**

1. ஆயுர்வேத மருந்து வகைகள், மருந்துப் பொருட்கள் மற்றும் தயாரிக்கும் மருந்துகளை உயர் தரத்துடன் உற்பத்தி செய்தல்.

2. அரச, மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கான மருந்துத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதோடு போட்டிகரமான ஆயுர்வேத மருந்துச் சந்தையில் பிரதான விநியோகித்தர் ஆதல்.

3. மருந்து உற்பத்தியின் அத்தியாவசிய ஆயுர்வேத, சித்த, யுனானி உலராத மருந்து வகைகளை இறக்குமதி செய்தல் மற்றும் தேசிய சந்தையின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப விற்பனை செய்தல்.

4. ஆயுர்வேத மருந்து வகைகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உலராத ஆயுர்வேத மருந்து வகைகளை இற்றை வரைப்படுத்தப்பட்ட உத்தரவாத விலையின் கீழ் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி நியாய விலையில் விற்பனை செய்தல் மற்றும் இதன் மூலம் உற்பத்தி செய்யும் கமக்காரர்களை பாதுகாப்பதும் ஆகக் கூடிய விலையில் பெற்றுக் கொள்வதற்குத் திட்டமிடலும்.

5. மருந்து உற்பத்திக்குத் தேவையான மூலிகைச் செடிகளைப் பாதுகாத்தல் மற்றும் பயிர்ச் செய்கையை விரிவாக்குவதற்கான வேலைத் திட்டங்களை வகுத்தல்.

6. மருந்து உற்பத்தியின் தர விதிப்புக்கு ஆயுர்வேத மருந்துகள் தொடர்பான நுட்ப மற்றும் மருந்துப் பொருட்களை ஆராய்ச்சி செய்தல் அத்துடன் அவ்வாறான மருந்துகளைத் தரம் மிக்கதாக்குதல்.

7. ஆயுர்வேத மருந்துக் கூடத்தை நடாத்திச் செல்லல். மற்றும் மருந்து வகைகளின் உற்பத்திக்குத் தேவையான ஆயுர்வேத மருந்து வகைகளைத் தயாரித்தல்.

8. ஆயுர்வேத மருந்துகள் உற்பத்திக்குத் தேவையான தடை செய்யப்பட்ட மருந்துகளை வெடிப் பொருட்களையும் சட்டரீதியாகப் பெற்றுக் கொண்டு மருந்துகளை உற்பத்தி செய்யும் வைத்தியர்களுக்கு சட்டரீதியாக வழங்குவதன் மூலம் பாரம்பரிய வைத்திய முறையைப் பேணுவதன் பொருட்டு செயற்படுதல்.

## (05). வர்த்தக நிலையம்

### 5.1 பிரதான அலுவலகமும் உற்பத்திக் கூடமும்

மகரகம, நாவின்னை வீதி, இல.94 என்னும் இடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### 5.2 விற்பனை நிலையங்கள்

| | | |
|---|---|---|
| விஜயராம (மருத்துவ சிகிச்சைகளுடன்) | : | இல.22, ஶ்ரீ சோரத்த மாவத்தை, கங்கொடவில. நுகேகொடை. |
| கண்டி (மருத்துவ சிகிச்சைகளுடன்) | : | இல.70, யட்டிநுவர வீதி, கண்டி. |
| தியத்தலாவ | : | சனானி மாளிகை, தியத்தலாவை. |
| அநுராதபுரம் (மருத்துவ சிகிச்சைகளுடன்) | : | இல. 561/86 சந்தை வீதி, புதிய பஸ் தரிப்பிடம், அநுராதபுரம். |
| பதுளை | : | இல.35/36, மத்திய பஸ் தரிப்பிடம், பதுளை. |
| புறக்கோட்டை | : | கொழும்பு, கோட்டை புகையிரத நிலையம், புறக்கோட்டை. |
| நாவின்ன | : | இல.94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மகரகம. |
| இரத்தினபுரி | : | இல.32, பஸ் தரிப்பிடம், இரத்தினபுரி. |
| தங்காலை | : | இல.18, புதிய வர்த்தகக் கட்டடத் தொகுதி, யாய வத்தை, கொடிகமுவ, நெட்டோல்பிட்டிய. |
| பத்திரமுல்லை | : | பரீட்சை திணைக்களம், பலவத்தை, பத்திரமுல்ல. |
| யாழ்ப்பாணம் | : | பொது வர்த்தகக் கட்டடத் தொகுதி, யாழ்ப்பாணம் |
| காலி | : | இல.38, ஒல்கொட் மாவத்தை, காலி. |
| செத்சிறிபாய | : | செத்சிறிபாய, பத்திரமுல்ல. |
| ஜனகலா | : | ஜனகலா நிலையம், பத்திரமுல்லை. |
| மொனராகலை | : | இல. 167, வெல்லவாய வீதி, மொனராகலை. |

(06) <u>பணிப்பாளர் சபை</u>

| | | |
|---|---|---|
| 1. | திரு. டீ.டீ. சோமவீர சந்திரசிறி | - தலைவர் |
| 2. | மருத்துவர் திரு. சி.ரி.பி.சேனாரத்ன | - முகாமைத்துவப் பணிப்பாளர் |
| 3. | மருத்துவர் திரு. பி.ஏ.ரத்னபால | - பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 4. | திரு. ரத்னசிறி கோட்டகே | - பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 5. | கலாநிதி திரு. சரத் புத்ததாச | - பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 6. | திரு.டபிள்யு.கே.பேமரத்ன | - பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 7. | மருத்துவர் திரு. ரி.எம்.ஜீ.பீ எக்கநாயக்க | - பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 8. | திரு.ஏ.கே.செனெவிரத்ன | - திறைசேரி பிரதிநிதி |

**7. நிறைவேற்று உத்தியோகத்தர் சபை**

| | | |
|---|---|---|
| 1. | தலைவர் | - திரு.டீ.டீ.சோமவீர சந்திரசிறி |
| 2. | முகாமைத்துவ பணிப்பாளர் | - மருத்துவர் திரு. சீ.டீ.பி.சேனாரத்ன |
| 3. | உற்பத்தக்கூட முகாமையாளர் | - திரு. கே.டீ.எம்.அர்ஜன சந்திரசேக்கர |
| 4. | விற்பனை முகாமையாளர் | - திரு. பேர்னாட் காரியவசம் |
| 5. | வழங்கல் முகாமையாளர் | - திருமதி. தீப்பனி வன்னியாரச்சி |
| 6. | மனிதவள முகாமையாளர் | - செல்வி லங்கா வரகாகொட |
| 7. | நிதி முகாமையாளர் | - திரு. கெலும் பத்திரவசம் |
| 8. | கணக்காளர் | - திருமதி. ஏ.டி.எஸ்.டி. தென்னக்கோன் |
| 9. | மருத்துவ உத்தியோகத்தர் (க.மே) | - திரு. பரக்கும் ஏக்கநாயக்க |
| 10. | திட்டமிடல் முகாமையாளர் (க.மே) | - திருமதி சோமா நாமசிங்க |
| 11. | உதவி தரக் கட்டுப்பாட்டு முகாமையாளர் | - திரு. ஹேமந்த கஸ்தூரி ஆரச்சி |
| 12. | உதவி செலவினக் கணக்காளர் | - திரு.வீரவிஜய குணசேக்கர |
| 13. | பதவிநிலை உதவியாளர் | - திரு. லால் ரணசிங்க |
| 14. | கணனித் தரவு உத்தியோகத்தர் | - திரு.சஞ்சீவ குமார் |
| 15. | உதவி மருந்தாளர் | - திருமதி நில்மினி குணசேக்கர |
| 16. | உதவி மருந்தாளர் | - திருமதி. தமயந்தி கொடிக்கார |
| 17. | பிரதான களஞ்சிய கட்டுப்பாட்டாளர் | - திரு. சுனில் வல்பொல |
| 18. | பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர் | - திரு. ரஞ்சித் சேனாரத்ன |
| 19. | சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் | - திரு. அனுர திலகரத்ன |
| 20. | உற்பத்தி ஊக்குவிப்பு உத்தியோகத்தர் | - திருமதி. கிருசாந்தா லியனகே |

**உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

| | | |
|---|---|---|
| 1. | உள்ளகக் கணக்காய்வாளர் | - திரு. யு. ஜயரத்ன |

## (08)பதவியணி குழாம்

2013 ஆண்டின் பதவியணிக் குழாம்

| பதவிப் பெயர் | பணி | உற் | விஜே | நாவி | கண்டி | திய | பது | அனு | கோட் | ப.மு | தங் | இரத் | மொண | காலி | செத் | பரீ (இசு) | யாழ் | நிகவ | தே.கை.ச | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட முகாமையாளர்கள் | 1 | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | | | 1 |
| முகாமையாளர்கள் | 4 | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | | | 5 |
| கனிஷ்ட முகாமையாளர்கள் | 6 | 8 | | | | | | | | | | | | | | | | | | 14 |
| முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தொழல்நுட்ப உத்தியோகத்தர்கள் | 1 | 5 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | | | 6 |
| முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தொழில்நுட்பம் சாராத உத்தியோகத்தர்கள் | 29 | 24 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | | - | 1 | 1 | 1 | - | - | 1 | 1 | | 1 | 65 |
| ஆரம்ப வகுதி ஓரளவு தேர்ச்சியுள்ள உத்தியோகத்தர்கள் | - | 2 | | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | | | 2 |
| ஆரம்ப வகுதி தேர்ச்சியுள்ள உத்தியோகத்தர்கள் | | 10 | | | | | | | | | | | | | | | | | | 10 |
| ஆரம்ப வகுதி தேர்ச்சி இல்லாத உத்தியோகத்தர்கள் | 21 | 107 | 2 | 2 | 1 | 1 | 1 | 2 | | - | 1 | 1 | | 2 | 2 | | 1 | 1 | 1 | 146 |
| ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் | 1 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | | | 1 |
| அமய தொழிலாளி -தற்காலிக தொழிலாளி | - | 15 | - | - | - | - | - | - | - | - | - | | 1 | - | - | 1 | - | | 1 | 18 |
| அமய பயிற்சி தொழிலாளி ( வேறு) | - | 8 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | | | 8 |
| மொத்தம் | 63 | 180 | 3 | 3 | 2 | 2 | 2 | 3 | 0 | 0 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 1 | 3 | 276 |

## 9. ஊழியர்களின் ஊக்குவிப்புப் படி மற்றும் நலன்புரிகள்

**<u>ஊழியர்களை ஊக்குவித்தல்</u>**

மிகவும் ஆக்கத்திறன் வாய்ந்ததும் வினைத்திறன் வாய்ந்ததுமான சேவைக்காக மொத்த பதவியணியினருக்கும் வரவு ஊக்குவிப்புப் படி, உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி ஊக்குவிப்புப் படி மற்றும் ஆக்கத்திறன் வாய்ந்த படி வழங்கப்பட்டதுடன் இதற்கு மேலதிகமாக வருடாந்த மிகைப் படியும் பெற்றுக் கொள்ளாத மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவும் செலுத்தப்பட்டது.

**ஊழியர் நலன்புரிகள்**

உற்பத்தி ஏற்பாடுகளுக்காக நேரடியாக சம்பந்தப்படுகின்ற சகல ஊழியர்களுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் சகல ஊழியர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் மூன்று நாள் வருடாந்த களியாட்டச் சுற்றுலாவுக்காக கூட்டுத்தாபனத்தின் அனுசரணை வழங்கப்பட்டது. மரணச் சடங்குகளுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டதுடன் இதற்கு மேலதிகமாக ஏனைய வசதிகளும் வழங்கப்பட்டது.

(10) மருந்து உற்பத்திகள் உற்பத்திப் பிரிவுகளாக பின்வருமாறு.

| | மூலிகையின் பெயர் | பிரிவு | 2013 ஆண்டு | 2012 ஆண்டு | 2011 ஆண்டு | 2010 ஆண்டு | 2009 ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| 1 | அரிஸ்ட / வைன் | மி.லீ750 | 130,959.50 | 145,552.00 | 140,351.00 | 144,356.00 | 154,406.00 |
| 2 | ஆசவ | மி.லீ750 | 142,933.00 | 112,948.00 | 124,483.00 | 134,150.00 | 136,063.00 |
| 3 | க்வாத்த | மி.லீ750 | 60,393.34 | 45,945.00 | 65,506.00 | 66,606.00 | 50,034.00 |
| 4 | சிரப் | மி.லீ750 | 17,768.63 | 20,140.00 | 21,812.00 | 27,861.00 | 19,736.00 |
| 5 | தைலம் | மி.லீ750 | 163,483.92 | 139,847.00 | 147,702.00 | 135,248.00 | 132,051.00 |
| 6 | சூரணம் | கி.கி | 29,224.90 | 45,945.00 | 26,092.00 | 30,318.00 | 32,038.00 |
| 7 | கல்க /லேஹ / லேப | கி.கி | 22,173.40 | 19,945.00 | 18,360.00 | 22,311.00 | 17,316.00 |
| 8 | ரச | கி.கி | 3,121.50 | 1,417.00 | 1,618.00 | 1,702.00 | 1,287.00 |
| 9 | வடினா / குகுல் | கி.கி | 15,233.20 | 9,651.00 | 14,422.00 | 10,212.00 | 10,969.00 |
| 10 | **புதியஉற்பத்திகள் 01** | | | | | | |
| | (1) ஜைஹங்ச ரசாயணய | கி.கி | 138.88 | 412.00 | 202.00 | 160.00 | 259.00 |
| | (2) திரிபலா வில்லை | கி.கி | 709.56 | 500.00 | 1,057.00 | 506.00 | 655.00 |
| | (3) மேதஹரணி வில்லை | கி.கி | 457.20 | 191.00 | 256.00 | 159.00 | 92.00 |
| | (4) மதுரு துபய | கி.கி | | | | | |
| | (5) சுபேசி | கி.கி | 10.96 | 27.00 | 57.00 | 29.00 | 1,935.00 |
| | (6) மதுமேஹ ஹரனி வில்லை | கி.கி | | | | 3.00 | |
| 11 | **புதிய உற்பத்திகள்** | | | | | | |
| | (1) தெம்பும் சாறு | கிராம். 05 | 151,893.00 | 103,680.00 | 95,000.00 | 83,600.00 | 127,108.00 |
| | தெம்பும் சாறு | கிராம். 250 | | 1.00 | | | |
| | (2) பேயாவ | கிராம். 05 | 245,785.00 | 147,313.00 | 194,000.00 | 178,600.00 | 179,799.00 |
| | பேயாவ | கிராம். 250 | | 1.00 | | | |
| | (3) பஸ் பங்குவ | கிராம். 50 | 44,671.00 | 67,924.00 | 44,560.00 | 10,880.00 | 61,660.00 |
| | (4) கோமாரிகா சம்பு | மி.லீ95 | 723.20 | 8,626.00 | 6,263.00 | 5,294.00 | 4,004.00 |
| | (5) நன்னாரி தூள் | கி.கி | | 338.00 | 33.00 | - | - |
| | (6) வில்வம் பட்டைத் தூள் | கி.கி | | 560.00 | - | - | - |
| | **வேறு உற்பத்தி வகைகள்** | | | | - | - | - |
| | (1) ANTI DIABETIC HERBLE TEA 25 BAGS | box | | 32.00 | - | - | - |
| | (2) HERBLE CURRY SOUP 5g (EEPORT) | 5g | | 500.00 | - | - | - |
| | (3) MIXE HERBLE TEA 1.5g /06 BAGS (EXPORT) | Nos | | 4,320.00 | - | - | - |
| | (4) SPICY HERBLE TEA 5g (EXPORT) | 5g | | 500.00 | - | - | - |
| | (5) PANTA KASAYA 60g | கி.கி | | 141.00 | - | - | - |

**(11) அரச மற்றும் தனிப்பட்ட விற்பனை நிலையங்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மருந்துகளின் பெறுமதி பின்வருமாறு.**

(ரூ. புத்து இலட்சங்களில்)

| | 2013 ஆண்டு | 2012 ஆண்டு | 2011 ஆண்டு | 2010 ஆண்டு | 2009 ஆண்டு | 2008 ஆண்டு |
|---|---|---|---|---|---|---|
| அரச பிரிவு | 336.49 | 315.98 | 294.76 | 263.9 | 250.71 | 219.3 |
| <u>விற்பனை நிலையம்</u> | | | | | | |
| விஜயராம வெத கெதர | 10.59 | 6.54 | 6.36 | 6.52 | 6.1 | 6.80 |
| நடமாடும் விற்பனை | 0.33 | 0.12 | 0.27 | | 0.32 | 0.94 |
| கண்டி விற்பனை நிலையம் | 6.22 | 6.53 | 5.37 | 4.86 | 4.93 | 4.79 |
| தியத்தலாவ விற்பனை நிலையம் | 3.05 | 3.33 | 1.94 | 3.44 | 2.42 | 3.21 |
| அநுராதபுரம் விற்பனை நிலையம் | 2.00 | 1.85 | 0.98 | 1.15 | 1.42 | 1.46 |
| பதுளை விற்பனை நிலையம் | 2.94 | 2.65 | 1.77 | 1.63 | 1.49 | 1.57 |
| புறக்கோட்டை விற்பனை நிலையம் | 2.22 | 4.15 | 3.66 | 2.89 | 2.39 | 2.36 |
| நாவின்ன விற்பனை நிலையம் | 12.86 | 9.78 | 9.28 | 8.14 | 7.81 | 6.70 |
| இலக்கம் 008 களஞ்சியம் | 19.86 | 23.54 | 20.38 | 16.48 | 13.66 | 10.11 |
| இரத்தினபுரி விற்பனை நிலையம் | 12.46 | 9.39 | 4.74 | 3.11 | 1.88 | 1.83 |
| தங்காலை விற்பனை நிலையம் | 2.09 | 1.25 | 2.17 | 1.10 | 1.07 | 0.10 |
| பரீட்சை திணைக்கள விற்பனை நிலையம் | 0.98 | 1.02 | 1.01 | 0.75 | 0.60 | 0.63 |
| யாழ்ப்பாணம் விற்பனை நிலையம் | 4.53 | 2.89 | 2.07 | 1.01 | 0.31 | |
| காலி விற்பனை நிலையம் | 5.58 | 4.65 | 3.68 | 1.04 | | |
| செத்சிறிபாய விற்பனை நிலையம் | 1.67 | 1.20 | 0.21 | | | |
| ஜனகலா நிலையம் | 0.31 | 0.60 | 0.03 | | | |
| மொனராகலை விற்பனை நிலையம் | 1.27 | 0.74 | | | | |
| **மொத்தம்** | **425.45** | **396.21** | **358.68** | **316.02** | **295.11** | **259.80** |

## (12) வருமானங்கள் பகிர்ந்து சென்ற விதம்

| | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|---|
| விற்பனைகள் | 100.00 | 100.00 | 100.00 | 100.00 | 100.00 | 100.00 |
| கழித்தல் :-விற்பனை செலவினங்கள் | 62.46 | 61.81 | 56.13 | 72.30 | 71.69 | 57.85 |
| தேறிய இலாபம் | 37.54 | 38.19 | 43.87 | 27.70 | 28.31 | 42.15 |
| கூட்டல் - வேறு வருமானங்கள் | 2.08 | 4.68 | 4.28 | 1.79 | 1.84 | 1.22 |
| மொத்த வருமானம் | 39.62 | 42.87 | 48.15 | 29.49 | 30.15 | 43.37 |
| கழித்தல் :- | | | | | | |
| நிறுவன மற்றும் நிருவாக செலவுகள் | 18.29 | 19.56 | 21.81 | 19.95 | 20.14 | 18.37 |
| விற்பனை மற்றும் விநியோக செலவுகள் | 11.65 | 9.03 | 8.60 | 6.77 | 5.78 | 5.86 |
| நிதிச் செலவுகள் | 0.64 | 0.01 | 0.10 | 1.28 | 0.26 | 0.34 |
| வேறு செலவுகள் | - | 0.62 | - | - | - | - |
| **மொத்த செலவுகள்** | 30.58 | 29.22 | 30.51 | 28.00 | 26.18 | 24.57 |
| **தொழிற்பாட்டு இலாபம் /(நட்டம்)** | 9.04 | 13.65 | 17.64 | 1.49 | 3.97 | 18.80 |
| கூட்டல் -வட்டி வருமானங்கள் மற்றும் தொழிற்பாடு சாராத வருமானங்கள் | 1.31 | 3.75 | 0.55 | 0.43 | 0.01 | 0.79 |
| வரி குறைப்பதற்குப் பின்னர் இலாபம்/(நட்டம்) | 10.35 | 17.40 | 18.19 | 1.92 | 3.98 | 19.59 |
| **<u>கழித்தல்</u>** | | | | | | |
| நிக்கவரெட்டி மூலிகைத் தோட்டம் (நட்டம்) | 0.43 | 0.45 | 0.37 | 0.02 | - | - |
| **<u>கழித்தல்</u>** | | | | | | |
| வரிக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு | 2.65 | 4.74 | 5.16 | 0.38 | 0.80 | 3.92 |
| **தேறிய இலாபம் /(நட்டம்)** | **7.27** | **12.21** | **12.66** | **1.52** | **3.18** | **15.67** |

(13) <u>இலாப பங்களிப்பு (ரூ. மில்லியன்களில்)</u>

| | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 |
|---|---|---|---|---|---|---|
| விற்பனைகள் | 425.45 | 396.22 | 358.68 | 316.02 | 295.12 | 259.81 |
| கழித்தல் :-விற்பனை விற்பனை செலவில | 265.72 | 244.90 | 201.33 | 228.48 | 211.58 | 150.31 |
| தேறிய இலாபம் | 159.73 | 151.32 | 157.35 | 87.54 | 83.54 | 109.50 |
| கூட்டல் - வேறு வருமானங்கள் | 8.848 | 18.55 | 15.34 | 5.64 | 5.43 | 3.18 |
| மொத்த வருமானம் | 168.58 | 169.87 | 172.69 | 93.18 | 88.97 | 112.68 |
| கழித்தல் :- | | | | | | |
| நிறுவன மற்றும் நிருவாக செலவுகள் | 77.82 | 77.55 | 78.23 | 63.04 | 59.43 | 47.71 |
| விற்பனை மற்றும் விநியோக செலவுகள் | 49.558 | 35.80 | 30.86 | 21.39 | 17.07 | 15.23 |
| நிதிச் செலவுகள் | 2.70 | 0.07 | 0.37 | 4.03 | 0.76 | 0.87 |
| வேறு செலவுகள் | - | 2.49 | - | - | - | - |
| **மொத்த செலவுகள்** | 130.08 | 115.91 | 109.46 | 88.46 | 77.26 | 63.81 |
| **தொழிற்பாட்டு இலாபம் /(நட்டம்)** | 38.49 | 53.96 | 63.23 | 4.72 | 11.71 | 48.87 |
| கூட்டல் -வட்டி வருமானங்கள் | - | 1.45 | 0.83 | 0.57 | 0.02 | 2.05 |
| தொழிற்பாடு சாராத வருமானங்கள் | 5.59 | 13.44 | 1.15 | 0.72 | 11.73 | 50.92 |
| நிக்கவரெட்டி மூலிகைத் தோட்டம் (நட்ட | (1.83) | -1.79 | -1.33 | 0.00 | 0.00 | 0.00 |
| வரிக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு | -11.28 | -18.78 | -18.52 | 1.20 | 2.34 | 10.18 |
| **தேறிய இலாபம் / (நட்டம்)** | **30.98** | **48.30** | **45.36** | **4.81** | **9.38** | **40.74** |

(14) **<u>மருந்து உற்பத்திகளுக்காக மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதிலுள்ள பிரச்சினைகள்</u>**

மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தேவையான மூலப் பொருட்களில் அநேகமானவை காடுகள் சார்ந்த இடங்களிலேயே தற்பொழுது பெற்றுக் கொள்ளப்படுகின்றது. தற்பொழுது காடுகளை பாதுகாக்கும் சட்ட விதிகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதனால் காடுகள் சார்ந்த இடங்களில் மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ள வேண்டிய மருந்துகளை உற்பத்தி செய்வதில் கடினமான நிலைக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்ச்சியாக மருந்து உற்பத்திகளுக்கு நேரடியான தாக்கங்களைச் செலுத்துகின்ற விடயமாக உள்ளது. இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளுவதற்காக சுதேச மருத்துவத்துறை அமைச்சின் கீழிருந்த 50 ஏக்கரைக் கொண்ட விவசாயப் பண்ணை (நிக்கவரெட்டிய றந்தெனிகம மூலிகைத் தோட்டம்) வழங்கப்பட்டதுடன் தற்பொழுது இதில் மூலிகைப் பயிர்ச் செய்கைக்காக அபிவிருத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. விசேடமாக உள்நாட்டில் பெற்றுக் கொள்ளுவதற்குக் கடினமாகவுள்ள வட்டுக்காய், இஞ்சி போன்ற மூலிகைகள் இந்த விவசாயப் பண்ணையில் பயிர் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கருத்திட்டத்தின் மூலம் கிடைக்கின்ற மூலப் பொருட்கள் மற்றும் மூலிகைகள் நேரடியாக கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக 2011 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பயன்படுத்தப்பட்டதுடன் எதிர்காலத்திலும் இந்த மூலிகைச் செய்கைகளை விரிவுபடுத்தி எடுப்பதற்கு கடினமாகவுள்ள மூலிகைகளை பெற்றுக் கொள்வதற்கான முறையொன்று தற்பொழுது வகுக்கப்பட்டுள்ளது.

(15) **<u>கூட்டுத்தாபனத்தின் உற்பத்திக் கூடமும் களஞ்சியசாலை வசதிகளை விரிவுபடுத்தலும்.</u>**

கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளுக்காக தற்பொழுது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கூடுதலான கேள்விகள் கிடைப்பதன் காரணத்தினால் சிறந்த சந்தையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. கட்டாயமாக கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளில் அதிகரிக்கும் தேவைப்பாடு உள்ளது என்பதுடன் மூலப் பொருட்கள் மற்றும் முடிவுறுத்தப்பட்ட மருந்துகளை களஞ்சியப்படுத்தும் இடவசதிகள் இல்லாத பிரச்சினை காணப்படுவதனால் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் மூன்று மாடிக் கட்டடத் தொகுதியொன்றை நிருமாணிப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து திறைசேரியினால் குறித்தொதுக்கப்பட்டுள்ள 40 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி இந்த பணிகள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் இதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய வசதிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படக்கூடும் என எதிர்பார்க்கின்றேன். இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்கனவே இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் தேவையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டு நிருமாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் தற்பொழுதுள்ள உற்பத்திக் கூடம் 40 ஆண்டுகளுக்கும் மேலான பழைமை வாய்ந்தது. ஆதலால் புதிய தொழில்நுட்பத்திற்கு அமைவான புதிய உற்பத்திக் கூடத்தின் தேவைப்பாடு ஒன்று உள்ளது. தற்பொழுதுள்ள கூட்டுத்தாபன மருந்துகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிலவுகின்ற கேள்விளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளை வகுக்க வேண்டும் என்பதுடன் அதற்காக தனியார் பிரிவுகளுடன் போட்டிகரத் தன்மைக்கு முகங்கொடுக்கவும் வேண்டி உள்ளது. அதற்காக புதிய தொழில்நுட்பத்திற்கு அமைவாக புதிய உற்பத்திக்கூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாக 2 ஏக்கர் 3 றூட் 10.3 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டொன்றை தற்பொழுதுள்ள கூட்டுத்தாபனத்தின் உற்பத்திக்கூடம் அமைந்துள்ள பிரதேசத்தின் அருகாமையில் எடுப்பதற்கு முடியுமாயின. வரையறுக்கப்பட்ட இலங்கை கூட்டுறவு சங்கத்திற்கு உரிய இந்தக் காணித் துண்டு மகரகம பத்திரகொட பாதைக்கு அருகாமையில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததுடன் இதை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளதுடன் இதற்குத் தேவையான 112.5 மில்லியன் ரூபா தொகையில் 56 மில்லியன் ரூபாவை பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதுடன் மீதித் தொகையை கூட்டுத்தாபனம் இந்த உடமையை அடகு வைத்து அரச வங்கியொன்றில் கடனாக பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இந்த பணிகளுக்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு புதிய தொழில்நுட்பத்திற்கு அமைவாக புதிய உற்பத்திக் கூடம் ஒன்றை நிர்மாணிப்பதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளை விரிவாக்குவதற்கு எதிர்பார்ப்பதுடன் இதன் மூலம் ஆக்கத் திறன் வாய்ந்த பண்புசார் உற்பத்திகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சந்தைகளுக்கு வழங்கக் கூடிய ஆற்றல் கிடைக்கும்.

**(16) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை நிறுவுதல்**

இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 2013 ஆம் ஆண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை 13 தடவைகள் நடாத்தியுள்ளதுடன் இதன்போது கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கிய கணக்காய்வு விசாரணைகள், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் வழங்கப்படுகின்ற கணக்காய்வு விசாரணைகள கலந்துரையாடப்பட்டு இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை சீர் செய்வதற்கு தேவையான வழிகாட்டல்கள் மேற் கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக சுதேச மருத்துவத்துறை அமைச்சின் செயலாளரின் தலைமையில் அமைச்சு மட்டத்திலான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை நடாத்தப்பட்டுள்ளதுடன் இதன்போது கணக்காய்வு விசாரணைகளில் உள்ள தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றமும் பரிசீலனை செய்யப்பட்டது.

2013 ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர் சபையின் விபரங்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) திரு. ஏ.கே. செனவிரத்ன | - | குழுத் தலைவர |
| 2) திரு. ரத்னசிரிகொட்டகே | - | குழு உறுப்பினர |
| 3) கலாநிதி திருசரத் புத்ததாச | - | குழு உறுப்பினர |
| 4) திரு. ஜே. டப்லிவ். கே. பிரேமரத்ன | - | குழு உறுப்பினர |
| 5) திருமதி. ஜே. எம். எச. பெரேரா | - | குழு உறுப்பினர |
| 6) திருமதி. எம். பீ. சீ. பெரேரா | - | கணக்காய்வு கண்காணிப்பாளருக்காக |
| 7) திரு. யு. ஜயரத்ன | - | கூட்டஅழைப்பாளரகுழுச் செயலாளர |

**(17) நிதி முகாமைத்துவமும் கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான கருத்துக்களும்**

கூட்டுத்தாபனத்தின் கணக்கு முறைமைக்குள் நிலவுகின்ற பல்வேறுபட்ட குறைபாடுகளையும் முறைமையில் உள்ள குறைபாடுகள் பற்றியும் கணக்காய்வாளர் நாயகத்தினால் அவ்வப்போது கணக்காய்வு விசாரணைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு மேலதிகமாக பாராளுமன்றத்தின் பொதுக் குழுக்களினாலும் இந்த குறைபாடுகள் எடுத்துக் காட்டப்பட்டதுடன் தற்பொழுது இந்த குறைபாடுகளையும் சீர்கேடுகளையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம் தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு 2013 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதென குறிப்பிடுகின்றேன்.

நன்றி

* சரியான வழிகாட்டல்களை மேற்கொண்ட சுதேச மருத்துவத்துறை அமைச்சர் கௌரவ சாலிந்த திசாநாயக்க அவர்களுக்கும் செயலாளர் திரு.லலித் கன்னங்கர உட்பட பதவியணியினருக்கும்.

- கூட்டுத்தாபனத்தின் மூலதன மற்றும் அறவிடல்களை அதிகரிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய பொதுத் திறைசேரிக்கும்.

- ஒத்துழைப்பை நல்கிய ஆயுர்வேத திணைக்களத்தின் தற்போதைய ஆயுர்வேத ஆணையாளர் உட்பட பதவியணிக்கும் ஆயுர்வேத ஆராய்ச்சிக் கூடத்தின் பணிப்பாளர் உட்பட பதவியணிக்கும்.
- முடிவுறுத்தப்பட்ட மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் விற்பனை முகவர்களுக்கும்.
- முறைமைக் கட்டுப்பாட்டு இடைஞ்சல்கள் மற்றும் தவறுகளை சீர்செய்வதற்கு வழிகாட்டிய கணக்காய்வாளர் நாயகம் உட்பட பதவியணியினருக்கும்.
- மீளாய்வு ஆண்டுக்குள் கூட்டுத்தாபன நடவடிக்கைகளை முன் கொண்டு செல்வதற்கு மெச்சத்தகு ஒத்துழைப்பை நல்கிய கூட்டுத்தாபன முகாமைத்துவத்திற்கும் பதவியணியினருக்கும் எனதும் பணிப்பாளர் சபையினதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.



(டி.டி.சோமவீர சந்திரசிறீ )
தலைவர்
இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தானம்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எச்எம்/சீ/ஏடீசீ/1/13/27    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2015 மே 29

தலைவர்,

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்

**இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2014 திசெம்பர் 23 ஆம் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01

நிதி நிலைமைக் கூற்றில் ஓராண்டிற்குள் தீர்வையாகும் சொத்துக்கள் மாத்திரம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட 180 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டிய ரூபா 60 மில்லியன் கடன் தொகைக்காக பிணையாக வைக்கப்பட்டுள்ள வருவாய் முதலீட்டு வங்கிக் கணக்கில் 2013 திசெம்பர் 31 உள்ளவாறான மீதியான ரூபா 360,000 தொகை அக்கடனை செலுத்தி முடியும் வரை காசாக்க முடியாத போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16

---

(i) மீளாய்வாண்டின் இறுதியில் தேறிய பெறுமதி பூச்சியமான ரூபா 78,743,936 கிரயத்திலான ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் தற்போதய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகளின் முகப்பு பெறுமதி உடனடி மாற்றங்கள் ஏற்படுமாயின் வருடாந்தம் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது தங்க இருப்புக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படாது முன்னைய ஆண்டின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு பொருத்தமான நிலைக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் நீர் சுத்திகரிப்பு முறைமை ரூபா 18,588,229 தொகை செலவில் 2011 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டு 2013 சனவரி மாதத்தின் போது ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி தொடர்ந்தும் நடைமுறை வேலைக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18

---

வருமானங்கள் நிச்சயமாக கிடைப்பதை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே அவ்வருமானங்கள் இனங்காணப்பட வேண்டிய போதும், 2010 ஆம் ஆண்டில் பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 750,797 பெறுமதி 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கிடைக்கப் பெறாதிருந்ததுடன், இது பெறவேண்டிய வருமானத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வருமானம் எந்த மூலங்களிலிருந்து கிடைக்க வேண்டியதென கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கை

கணக்குகளில் பின்வரும் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு இயலாத தகவல்கள் குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது விலை மதிப்பிட முடியாத புராதனப் பெறுமதி வாய்ந்த கீழே காட்டப்பட்டுள்ள உருப்படிகள் களஞ்சியங்களில் காணப்பட்ட போதிலும், அவற்றை குறிப்பின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

| வகை | அளவு |
|---|---|
| | கி.கிராம் |
| முத்துச் சிப்பி | 86.35 |
| மான் கொம்பு | 52.01 |
| கஸ்தூரி உருண்டை | 23.00 |
| தலி பொத்து | 3.00 |

(ஆ) நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் சமர்ப்பிக்கப்படும் தகவல்களுக்கு மேலதிகமான தகவல்கள் குறிப்புக்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் வெவ்வேறு நபர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,648,937 தொகை பெறுமதியான நன்கொடைகளின் கிரயம் கணக்குகளில் இணக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்த ரூபா 317,920 கிரயத்திலான இருப்புக்கள் இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் அட்டுறுச் செலவின அதிகரிப்பு ரூபா 2,257,286 ஆக இருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 259,852 ஆக சீராக்கப்பட்டிருந்தது.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது ரஜரட்டவில் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,775,095 தொகையான கிரயம் நடைமுறை வேலைக் கணக்கில் ரூபா 1,808,795 ஆக பதிவு செய்யப்பட்டமையால் ரூபா 33,700 தொகை கணக்குகளில் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 52,136 தொகையான நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 40,962 தொகையான நிலையான வைப்பு வட்டி என்பன குறைத்துக் கணக்கீடு செய்யப்பப்பட்டிருந்தன.

(உ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான நிலையான வைப்புக்களுக்கு கிடைக்கப்பெறும் வட்டியிலிருந்து வங்கியால் கழிக்கப்பட்ட ரூபா 33,972 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்படுகின்ற மருந்துகளின் பிரதான கொள்வனவாளர்களான ஆயுர்வேத திணைக்களம் மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சு என்பனவாக இருந்ததுடன், தீர்ப்பதற்கு ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 2,390,718 தொகையான கடன் மீதியில் 83 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன், இக்கடன் மீதியில் ரூபா 1,392,209 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் அறவிடப்படாமல் காணப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் 13 அரச நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த மருந்துகளுக்காக ஓராண்டு காலம் கடந்திருந்த ரூபா 2,390,718 தொகையான நிலுவை மீதியொன்று காணப்பட்ட போதிலும், குறித்த நிறுவனங்களிடமிருந்து அத்தொகையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தின் கடன் விற்பனை உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறையின் பிரகாரம் கடன் அறவீட்டுக் காலம் 60 நாட்களாக இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் 8 நிறுவனங்களுக்கு செய்யப்பட்ட கடன் விற்பனைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,558,432 தொகை கடனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை கணக்காய்வு திகதியான 2014 யூலை 15 ஆம் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை.

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 10(5) பிரிவு | எதிர்வரும் ஆண்டிற்குரிய பாதீடு அவ்வாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தின் 2013 ஆம் ஆண்டிற்கான பாதீடு 2012 திசெம்பர் 24 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | (i) மீளாய்வாண்டில் இடம்பெற்ற இரண்டு வாகன விபத்துகளுக்காக ஆரம்ப பரிசோதனையொன்றோ அல்லது இறுதிப் பரிசோதனையொன்றோ மேற்கொள்ளபடாமையால் இழப்பின் அளவு, விபத்திற்கான காரணம் மற்றும் அதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. |
| | (ii) ஒரு வாகனத்திற்கான பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 260,442 தொகையாக இருந்த போதிலும், காப்புறுதி நிதியத்திலிருந்து ரூபா 127,253 தொகை மாத்திரம் இழப்பீடாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | கூட்டுத்தாபனத்தினால் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 760 | பொருட்கள் காணாமல் போனமை பல குறைவுகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2011 செப்தம்பர் 15 ஆம் திகதிய 58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கைப் பிரகாரம் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் ஆகியோருக்கு முறையே ரூபா 60,000 தொகை மற்றும் ரூபா 45,000 தொகையான மாதாந்த படிகள் மாத்திரம் உரித்தாக இருந்த போதிலும், அவர்களுக்கு வருகை படிகள்,வினைத்திறன் படிகள், உற்பத்திப் படிகள் மற்றும் உபகாரப் படிகளாக முறையே 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 174,376 தொகையும் ரூபா 148,062 தொகையும் 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 200,505 தொகையும் ரூபா 195,332 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 273,288,019 பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பணிப்பாளர் சபைத் தீர்மான இலக்கம் 10834 | கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட விடுமுறை நடைமுறைக் கோவை பணிப்பாளர் சபை தீர்மானத்தினால் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும், உத்தியோகத்தர்களினால் அந்த இரத்துச் செய்யப்பட்டிருந்த நடைமுறைக் கோவையின் பிரகாரம் விடுமுறை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 42,255,668 ஆன மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 62,731,392 ஆகக் காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 20,475,724 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 14,471,071 ஆல் குறைவடைந்தமை மற்றும் தேறிய நிதி வருமானம் ரூபா 5,985,655 ஆல் குறைவடைந்தமை என்பன இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செயற்பாடற்ற வருமானம் ரூபா 14,471,071 தொகை குறைவடைந்திருந்ததுடன், அது 53.43 சதவீதமாக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி திட்டத்தின் பிரகாரம் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 381,911,646 கிரயத்தை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், உள்ளவாறான கிரயம் ரூபா 282,328,813 ஆக இருந்தமையால் உற்பத்தி நடவடிக்கைகள் பின்தங்கிய நிலைமையில் இருப்பதாகவும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென பின்வரும் தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

| உருப்படி | திட்டமிடப்பட்ட உற்பத்தி | உள்ளவாறான உற்பத்தி | முரண் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | அலகு | அலகு | | நூற்றுக்கு |
| அரிஷ்ட (750 மில்லி லீற்றர்) | 197,700 | 130,443 | (67,257) | (34) |
| ஆசவ (750 மில்லி லீற்றர்) | 128,400 | 143,450 | 15,050 | 12 |
| தைலம் (750 மில்லி லீற்றர்) | 185,516 | 163,331 | (22,185) | (12) |
| குவாலு (750 மில்லி லீற்றர்) | 148,747 | 64,719 | (84,028) | (56) |
| சிரப் (750 மில்லி லீற்றர்) | 35,246 | 17,769 | (17,477) | (50) |
| கோமரிக்கா ஷம்பூ (95 மில்லி லீற்றர்) | 2,079 | 723 | (1,356) | (65) |
| வூர்ண (கிலோ கிராம்) | 37,476 | 29,321 | (8,155) | (22) |
| கல்க/லேகியம்/லேப/மோதக(கிலோ கிராம்) | 34,145 | 24,431 | (9,714) | (28) |
| புதிய உற்பத்தி (கிலோ கிராம்) | 15,853 | 5,400 | (10,453) | (66) |
| ரச/இரசாயனம் (கிலோ கிராம்) | 4,201 | 3,250 | (951) | (23) |
| வகிகா குகுள் (கிலோ கிராம்) | 16,830 | 11,238 | (5,592) | (33) |

(ஆ) மீளாய்வாண்டில் அரசதுறைக்கு ரூபா 395,488,0000 தொகையான விற்பனையொன்று எதிர்பார்க்கப்பட்ட போதும், மேற்படி நிலைமை அடிப்படையில் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உள்ளவாறான விற்பனை வருமானம் ரூபா 336,196,557 ஆக இருந்தமையால் பாதிடப்பட்ட விற்பனை வருமானத்தை உள்ளவாறான விற்பனை வருமானத்துடன், ஒப்பிடும் போது உள்ளவாறான விற்பனை ரூபா 59,291,443 ஆல் குறைவடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவ பலவீனங்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தால் நிலையான வைப்புக்களில் ரூபா 65,307,819 தொகை முதலீடு செய்யப்பட்டிருக்கையில் அத்தொகையைப் பயன்படுத்தாமல் காணியொன்று கொள்வனவு செய்வதற்காக 15 சதவீத வட்டி வீதத்தின் கீழ் 60 மில்லியன் தொகையான கடன் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) மூலப்பொருட்கள் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) களஞ்சியத்திற்கு மூலப்பொருட்களைப் பெற்றுக்கொண்டு பொருள் பெறுவனவு குறிப்பு (GRN) வழங்குவதற்கு முன்னர் பாதுகாப்பு பிரிவினால் இந்த மூலப்பொருட்கள் தொடர்பாக பரீட்சித்து குறித்த மாதிரிப்பட்டியல் மற்றும் பொருள் கொள்வனவுக் கட்டளையுடன் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அநேகமான சந்தர்ப்பங்களில் பொருள் பெறுவனவு குறிப்பு வழங்கப்பட்டதன் பின்னர் பாதுகாப்பு பிரிவினால் பொருள் பரிசோதனை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) மருந்துக் குழுவினால் மூலப்பொருள் பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரம் மூலப்பொருள் களஞ்சியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 26 சந்தர்ப்பங்களில் குழுவினால் பரிசோதனை செய்வதற்கு முன்னர் மூலப்பொருட்கள் களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) மருந்துக் குழுவினால் மூலப்பொருட்கள் பரிசோதிக்கப்படாமல் களஞ்சியத்திற்கு மூலப்பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், பொருள் கொள்வனவிற்காக கொள்வனவுக் கட்டளை பத்திரத்தை விநியோகிப்பதற்கு முன்னர் களஞ்சியத்திற்கு பொருட்கள் வழங்குனரால் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iv) மூலப்பொருட்களை உற்பத்திச் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கு முன்னர் அம்மூலப்பொருட்கள் மருந்து உற்பத்தி செயற்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கு பொருத்தமான நியம மட்டத்தில் இருப்பதாக மருத்துவக் குழுவின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மருத்துவக் குழுவின் பரிந்துரை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் மூலப்பொருட்கள் உற்பத்திச் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருடாந்த இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்தந்த ஆண்டுகளில் இருப்பு மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பாக தேவையான நடைமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், பௌதீக இருப்பு மீதிக்குப் பதிலாக புத்தக மீதி நிதிக்கூற்றுக்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

(ii) 2013 ஆம் ஆண்டில் இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், கடந்த 6 ஆண்டுகளில் மெய்மையாய்வு சபை மூலம் இனங்காணப்பட்ட இருப்பு மிகை மற்றும் பற்றாக்குறை என்பவற்றின் அளவு முறையே ரூபா 7,978,555 மற்றும் ரூபா 6,087,865 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 1,641,437 நன்கொடை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன், அவ்வாறு வழங்கப்பட்ட நன்கொடைகளில் ரூபா 367,395 தொகையான நன்கொடைகள் யாருக்கு வழங்கப்பட்டதென கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிக்கவரட்டிய மூலிகைத் தோட்டத்தின் செயற்பாட்டுச் செலவினம் அதிகமாக இருந்தமை மற்றும் மூலிகைத் தோட்டத்தில் இருந்து கிடைக்கின்ற மூலப்பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் 2011 முதல் 2013 வரை ரூபா 4,949,433 ஆன நட்டமொன்று அடைந்திருந்தது. தொடர்ந்தும் பராமரித்து நட்டத்தைக் குறைத்து வினைத்திறனான மூலிகை தோட்டமொன்றாக நடாத்திச் செல்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேவைப்பாட்டை இனங்கண்டுகொள்ளாமல் 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட வைன் போத்தல் மற்றும் கிரல மூடி என்பவற்றில் 2013 திசெம்பர் 31 வரையில் ரூபா 989,603 பெறுமதியான 24,002 வைன் போத்தல்களும் ரூபா 623,000 பெறுமதியான 28,000 கிரல மூடிகள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தன.

(ஆ) ஆய்வுகூட அறிக்கை மற்றும் மருத்துவ குழு அறிக்கை மூலம் நிராகரிக்கப்பட்டிருக்கையில் ரூபா 1,980,000 பெறுமதியான 4,000 கிலோ கிராம் தேன் 2012 யூன் மாதத்தில் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இக்கொள்வனவு தொடர்பான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், பணம் பெற்றுக்கொண்டமைக்கான பற்றுச்சீட்டுக்கள் மற்றும் செலவினங்களுக்குரிய கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கூட்டுத்தாபனத்தின் மூலம் ரூபா 5,930,284 செலவில் உற்பத்தி செய்ய முடியுமாக இருந்த 200 கிலோ கிராம் அக்ரக ஹஸ்ம மற்றும் நாக ஹஸ்ம ரூபா 7,137,130 இற்கு இறக்குமதி செய்தமையால் ரூபா 1,206,846 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

## 4.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கூட்டுத்தாபனத்தின் விடுமுறைக் கோவையின் 8.2 ஆம் பிரிவின் பிரகாரம் நியமனம் பெற்ற முதலாம் ஆண்டின் போது மருத்துவ விடுமுறைகள் உரித்தில்லாத போதும் அதற்கு முரணாக கூட்டுத்தாபனத்தில் முதலாவது நியமனம் கிடைத்த உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு முதலாம் ஆண்டின் போது சேமிக்கப்பட்ட மருத்துவ விடுமுறைக்காக 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை ரூபா 15,064,122 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2004 பெப்ரவரி 24 ஆம் திகதிய 1/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2014 நவம்பர் 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதன்படி நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் மீதான தாமதம் 09 மாதங்களாக காணப்பட்டது.

## 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள செய்யப்பட வேண்டிய வேலைத்தாள்களின் எண்ணிக்கை மற்றும் ஆண்டில் உள்ளவாறாக மேற்கொள்ளப்பட்ட வேலைத்தாள்களுக்கிடையே முரண்கள் அவதானிக்கப்பட்டன. அத்தோடு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 33 வேலைத்தாள்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அலகு எண்ணிக்கைகளுக்கிடையே முரண்கள் அவதானிக்கப்பட்டது.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 17 உருப்படிகள் ஆண்டில் உற்பத்தி செய்யப்படாதிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 8 உருப்படிகள் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

(iii) செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் உள்ளவாறான உற்பத்தி என்பவற்றுடன் ஒப்பிடும் போது உள்ளவாறான உற்பத்தி 50 சதவீதத்திற்கு குறைந்த 31 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iv) செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் உள்ளவாறான உற்பத்தி என்பன 50 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதத்தைப் பெற்றிருந்த 24 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(v) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொழிப்பாக்கப்பட்ட உற்பத்தி தொடர்பான அறிக்கையிலும் மாதாந்த உற்பத்தி திட்ட அறிக்கைகளின் பிரகாரமும் திட்டமிடப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூபா 381,911,645 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட திருத்தப்பட்ட உற்பத்திக் கிரயம் மற்றும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் காண்பிக்கப்பட்ட உற்பத்திக் கிரயத்திற்கிடையே ரூபா 5,000,000 ஆன முரண்கள் அவதானிக்கப்பட்டது.

## 5.3 தீர்வுசெய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை சீராக்குவதற்காக போதியளவு கவனம் செலுத்தப்படாதிருந்த குறைபாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2012 திசெம்பர் 24 ஆம் திகதிய 49 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கூட்டுத்தாபனமொன்றின் ஊழியர் ஒருவருக்கு செலுத்தக்கூடிய உபகாரப் படிகள் ரூபா 7,500 ஆக இருந்த போதிலும், அமைச்சரவையின் முன் அங்கீகாரம் இல்லாமல் ரூபா 10,000 வீதம் உபகாரப் படிகளாக ரூபா 2,263,166 தொகை பதவியணியினருக்கு செலுத்தியமையால் சுற்றறிக்கை நியதிகளுக்கு முரணாக ரூபா 607,500 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வங்கிக் கணக்குகள்

(i) 15 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த இதுவரை இனங்காணப்படாது வங்கிக்கு செலவு வைக்கப்படாதுள்ள ரூபா 224,168 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 20 ஆண்டுகளிற்கும் மேலான காலமாக நிலவிவருகின்ற தீர்க்கப்படாதுள்ள ரூபா 337,010 பெறுமதியான இனங்காணப்படாத மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 194,006 பொருட்களிற்காக அந்நிறுவனத்திற்கு கொடுப்பனவை மேற்கொள்ளாது கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளரின் எழுத்துமூல பணிப்புரையின் கீழ் ஆளொருவரின் பெயரிற்கு காசோலை வழங்கப்பட்டு அக்காசோலை அவரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) 01283115 ஆம் இலக்க வேலை அட்டையின் கீழ் மதுகா இருமல் பாணியை உற்பத்தி செய்கையில் இடம்பெற்றிருந்த ஊழியர் செயற்திறனின்மையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 233,400 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(உ) 009967 மற்றும் 009979 ஆம் இலக்க வேலை அட்டைகளின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டிருந்த தாரணி பாணிப் போத்தல்களில் துர்நாற்றம் வீசியமை காரணமாக விற்பனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த மருந்துகளின் பெறுமதி ரூபா 65,720 ஆகும்.

(ஊ) 2010 ஆம் ஆண்டில் ரூபா 1,775,095 தொகை செலவிடப்பட்டு ரஜரட உற்பத்தி தொழிற்சாலையின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு இடைப்போக்கில் நிறுத்தப்பட்டிருந்தது.

(எ) 2012 ஒக்தோபர் 12 ஆந் திகதிய 226/10/2012 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டு மூலம் சுதேச வைத்திய அமைச்சிற்காக புதுடில்லி நகரத்தில் உலக சுகாதார அமைப்பின் அலுவலகமொன்றைத் தொடங்குவதற்கு ரூபா 3,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் செயன்முன்னேற்றம் தொடர்பில் எவ்வித எழுத்துமூல சான்றுகளும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(அ) இருப்புக்கள்

(ஆ) கணக்கீடு

(இ) வாகனக் கட்டுப்பாடு

(ஈ) பதவியணியினர் நிர்வாகம்

(உ) மூலப்பொருள் கொள்வனவு

(ஊ) மருந்து உற்பத்திச் செயற்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்**
**இல. 94, பழைய கொட்டாவை வீதி, நாவின்ன**

**தயாரித்தல் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான அடிப்படை 2013**

1. **இணங்குதல் கூற்று**

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் (''நிதியியல் கூற்றுகள்'') என்பனவற்றுடன் சேர்த்து விரிவான வருமானக் கூற்று, நிதி நிலைக் கூற்று, பங்கு மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பனவற்றை உள்ளடக்குகின்ற நிதியியல் கூற்றுகள், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் எடுத்துரைக்கப்பட்ட புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (ளுடுகுசுளு ∴ டுமுயுளு) மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட நிதி ஒழுங்கு விதிகள் என்பனவற்றுக்கிணங்க தயாரிக்கப்பட்டடுள்ளன.

இந் நிதிக் கூற்றுகளை வெளியிடுவதற்கு 2014 நவம்பர் 14 அன்று பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

2. **அளவீட்டு அடிப்படை**

நிதி நிலைக் கூற்றில் காணப்படும் பின்வரும் முக்கிய விடயங்கள் தவிர இந் நிதிக் கூற்றுகள் வரலாறுக் கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(அ) இ.க.நி 19 இல் விதந்துரைக்கப்பட்ட எதிர்வு கூறப்பட்ட அலகு வரவு முறையினை அடிப்படையாக கொண்டு வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாடுகள் அவற்றின் தற்போதய பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.

(ஆ) மூல நிதியல்லாத சாதணங்கள் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.
நிதிக்கூற்றுகளில் பணவீக்க காரணிகளுக்காக சீராக்கல்கள் செய்யப்படவில்லை.

3. **தொடர்தியங்கும் எண்ணக்கரு**

அண்மைய எதிர்காலத்தில் தொடர்ந்தியங்குவதற்கு இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் இயலுமை பற்றிய மதிப்பீடொன்றினை பணிப்பாளர்கள் சபை மேற்கொண்டுள்ளதுடன் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை அண்மிய காலத்ததில் இல்லாதொழிப்பதற்கான அல்லது நிறுத்துவதற்கான தேவையினை அவர்கள் உத்தேசிக்கவில்லை.

4. **ஒப்பீட்டுத் தகவல்கள்**

முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுகளின் எடுத்துரைத்தலும் வகைப்படுத்தலும் சிறப்பாக எடுத்துரைக்கப்படுவதற்காகவும் நடைமுறை ஆண்டில் உள்ளவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகவும் பொருத்தமான இடங்களில் திருத்தப்பட்டுள்ளன.

## 5. மதிப்பீடுகளையும் தீர்ப்புகளையும் பயன்படுத்தல்.

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட நிதி ஒழுங்கு விதிகள் (ளுடுகுசுளு ∴ டுமுயுளு) என்பனவற்றுக்கிணங்க நிதிக் கூற்றுகளை தாயரித்தலானது கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகித்தல், சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகள் என்பவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகை ஆகியவற்றில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற தீர்ப்புகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை ஆக்குவதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது.

தீர்ப்புகளும் மதிப்பீடுகளும் வரலாற்று அனுபவம், போக்குகள் மற்றும் சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக இருப்பதற்கு நம்பப்படுகின்ற எதிர்பார்க்கைகள் உள்ளடங்களாக வேறு காரணிகளை அடிப்படையாக கொண்டவை. அதற்கமைய, உண்மையான பெறுபேறுகள் இத் தீர்பபுகள் மற்றும் மதிப்பீடுகளில இருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகள் மற்றும் மூல ஊகங்கள் என்பன அவற்றின் செல்லுபடியினை உறுதிசெய்யும் பொருட்டு முன்னெடுக்கப்படும் அடிப்படையொன்றில் மீளாயப்படுகினறன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், மதிப்பீடுகள் தீருத்தப்படுகின்ற அத்துடன் ஏதேனும் எதிர்காலப்பகுதிகளும் சேர்க்கப்பட்டு காலத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுகளில் அடையாளப்படுத்தப்பட்ட தொகைகள் மீது மிக முக்கியமான தாக்கத்தினைக் கொண்டுள்ள கணக்கீட்டுக் கொள்கையினை பிரயோகிக்கையில் காணப்படும் இக்கட்டான தீர்ப்புகள் பற்றிய தகவல்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பிலானவையாகும்.

வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாடுகளின் அளவீடு
பிற்போடப்பட்ட வரி∴பொறுப்புக்கள்

## 6. வெளிநாட்டு நாணய மாற்றம்

### (அ) தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைத்தல் நாணயம்

நிறுவனம் தொழிற்படுகின்ற ஆரம்ப பொருளாதாரச் சூழல் நாணயத்தினைப் (தொழிற்பாட்டு நாணயம்) பயன்படுத்தி கூட்டுத் தாபனத்தின் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டவை அளவிடப்பட்டுள்ளன. கூட்டுத் தாபனத்தின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக்கூற்றுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### (டி) கொடுக்கல் வாங்கல்களும் மீதியும்

கொடுக்கல் வாங்கல் தினத்தன்று நிலவுகின்ற நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் தொழற்பாட்டு நாணயத்திற்கு மாற்றம் செய்யப்படுகின்றன.

## 7. சொத்துகளும் அவற்றின் விலைமதிப்பீட்டு அடிப்படையும்

நிதி நிலைக்கூற்றில் நடைமுறைச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்ட சொத்துகள் காசு, வங்கி நிலுவைகள், கூட்டுத்தாபன நடவடிக்கைகளின் சாதாரண தொழிற்பாடுகளின்போது அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வாரத்தனுள், இவற்றில் எது குறுகியதோ அதில் காசாக தேறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றவை என்பனவாகும். அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினைத் தாண்டி வைத்திருப்பதற்கு கூட்டுத்தாபனம் எண்ணுகின்ற சொத்துகள் நடைமுறையற்ற சொத்துகள் தவிர்ந்த ஏனைய சொத்துகளாகும்.

## 7.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வு மற்றும் ஏதேனும் திரண்ட பெறுமான இழப்புகள் கழித்து கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் விடயங்களுக்காக மாறுதல் திகதியில் உள்ளவாறு கருதப்படக்கூடிய நியாப் பெறுமதியினைப் பயன்படுத்தி இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்தின் இ.நி.அ.நி 01 இனை முதற் தடவை பின்பற்றுதலின் தெரிவு விதிவிலக்கினை பிரயோகிப்பதனை கூட்டுத்தானம் தேர்ந்தெடுத்தது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் வியடங்களின் கிரயமானது, அதன் கொள்வனவு விலை, அதன் எண்ணப்பட்ட நோக்கத்திற்கு பணியாற்றும் நிலைக்கு அச் சொத்தினைக் கொண்டு வருவதற்கு நேரடியாக சாட்டத்தக்க ஏதேனும் செலவுகளை உள்ளடக்குகின்றது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஒன்றினை விற்று அகற்றுதல் மீதான பெறுகைகளும் இழப்புகளும் விற்று அகற்றலில் இருந்தான விற்றுவரவு மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொண்டுள்ள தொகை என்பவற்றுக்கிடையிலான வேறுபாடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் விரிவான வருமானக் கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## 7.2. பெறுமானத் தேய்வு

தேய்மானமானது சொத்தொன்றின் செலவாகவிருக்கின்ற அல்லது கிரயத்திற்காக பிரதியீடு செய்யப்பட்ட வேறு தொகை, அதன் எஞ்சிய தொகையினைக் கழித்த பெறுமானம் தேயத்தக்க தொகை மீது கணிக்கப்பட்டுள்ளது. சொத்தொன்றில் உள்ளடங்கியிருக்கும் எதிர்கால பொருளாதார நுகர்வின் எதிர்பார்க்கப்பட்ட வடிவத்தினை இது மிகவும் நெருக்கமா பிரதிபலிப்பதனால் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண விடயமொன்றின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட எதிரகால பயன்மிக்க ஆயுட்காலத்திற்கு நேர் நிரை அடிப்படையொன்றில் இலாபம் அல்லது நட்டத்தில் அடையாளப்படுததப்பட்டுள்ளது.

நடைமுறை மற்றும் விரிவான காலப்பகுதிக்காக மதிப்பிடப்பட்ட பயன்மிகு ஆயுட்காலமும் பெறுமானத் தேய்வு விகிதமும் பினவருமாறு:

| **சொத்துகளின் வகை** | **பயனுள்ள ஆயுட்காலம் (வருடங்கள்)** | பெறுமானத் தேய்வு விகிதம் (ூ ) |
|---|---|---|
| கட்டடங்கள் | 20 வருடங்கள் | 5ூ |
| இயந்திங்கள் | 06 வருடங்கள் மாதங்கள் 08 | 15ூ |
| நீர் வழங்கல் உபகரணங்கள் | 06 வருடங்கள் மாதங்கள் 08 | 15ூ |
| ஆய்வுகூட உபகரணங்கள் | 06 வருடங்கள் மாதங்கள் 08 | 15ூ |
| அலுவலக உபகரணங்கள் | 10 வருடங்கள் | 10ூ |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் | 20ூ |
| கருவிகளும் உபகரணங்கயும் | 03 வருடங்கள் | 33.33ூ |

சொத்தொன்றின் பெறுமானத் தேய்வானது அதனைப் பயன்படுத்துவற்காக கிடைக்கப்பெறும் அதேவேளை சொத்தொன்றின் பெறுமானத் தேய்வானது, சொத்து விற்பனைக்கு விடப்பட்டதாக வகைப்படுத்தப்பட்ட திகதி மற்றும் சொத்து அடையாளப்படுத்தாது விடப்டுள்ள திகதிளில் முந்தியதில் நிறுத்தப்படும்.

## 7.3. மூலதனமும் முன்னெடுக்கப்படும் பணியும்

அறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறான நிறைவு செய்யப்படாத இவ் ஆண்டின்போது உறப்பட்ட மூலதனச் செலவுகள், முன்னெடுக்கப்படும் மூலதப்பணியாக காண்பிக்கப்பட்டுள்ள அதேவேளை இவ் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட்ட மற்றம் பயன்பாட்டிற்கு விடப்பட்ட மூலதனச் சொத்துகள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் வகைக்கு மாற்றப்பட்டுள்ளன.

## 8. நிதிச் சொத்துகள்

கூட்டுத்தாபனம் அதன் நிதிச் சொத்துகளை பின்வருமாறு வகைப்படுத்துகின்றது: இலாபம் அல்லது நட்டம், கடன்களும் கிடைக்கப்பெறத்தக்கவையும், விற்பனைக்காக கிடைக்கப்பெறத் தக்கவை மற்றும் முதிர்வுக்காக வைக்கப்ட்டவை என்பன ஊடாக அதன் பெறுமதியில். நிதிச் சொத்துகள் பெறப்பட்டிருந்த நோக்கத்தினை வகைப்படுத்தல் சார்ந்துள்ளது. முகாமைத்துவம் அதன் நிதிச் சொத்து ஆரம்ப அடையாளப்படுத்தலின் வகைப்படுத்தலினை நிர்ணயிக்கின்றது. அறிக்கையிடும் காலத்தின் போதும் அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறும் கூட்டுத்தாபனம், இலாபம் அல்லது நட்டம், கடன்களும் கிடைக்கப்பெறத்தக்கவையும், விற்பனைக்காக கிடைக்கப்பெறத் தக்கவை மற்றும் முதிரவுக்காக வைக்கப்பட்டவை ஊடாக நியாயப் பெறுமதியாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துகளை கொண்டிருக்கவில்லை. அனைத்து நிதிச் சொத்துகளும் நியாய் பெறுமதியில் கொடுக்கல் வாங்கல் செலவுடன் சேர்த்து ஆரம்பத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## 9. பொருட் பதிவேடு

பொருட் பதிவேடுகள் குறைந்த கிரயத்திலும் நிகர தேறத்தக்க பெறுமதியிலும் அளவிடப்பட்டுள்ளன. பதிவேட்டுப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு உறப்பட்ட செலவினம், உற்பத்தி அல்லது மாற்றுதல் செலவு, அவை நிலைபெறும் இடத்திற்கும் நிலைக்கும் கொண்டு வருவதற்காக ஏற்பட்ட வேறு செலவுகள் என்பனவற்றினை பொருட் பதிவேட்டுச் செலவுகள் உள்ளடக்குகின்றன.

## 10. வர்த்தக கிடைக்கப் பெறத் தக்கவை

காசு அல்லது பிற நிதிச் சொத்து கிடைக்கப்பெறுவதற்கான உரிமையினை கூட்டுத்தாபனம் கொண்டுள்ள போது மாத்திரம் அதன் நிதி நிலைக் கூற்றில் நிதிச் சொத்துகளாக வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவையினை கூட்டுத்தாபனம் அடையாளப்படுத்துகின்றது.

## 11. காசும் காசுக்கு நிகரானவையும்

கையில் உள்ள காசு, கேள்வி வைப்புகள், மற்றும் குறுகிய கால உயர் திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் என்பன காசும் காசுக்கு நிகரானவையும் ஆக வரையறை செய்யப்பட்டுள்ளன. காசுப் பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காகா கையில் உள்ள காசு, வங்கிகளில் உள்ள வைப்புகள், மற்றும் தேறிய வங்கி மேலதிக பற்று நிலுவை என்பனவற்றை காசும் காசுக்கு நிகரானவையும் உள்ளடக்குகின்றது.

## 12. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

நிதி நிலைக்கூற்றின் மீது நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டவை கேள்வியின் பேரில் அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் கொடுப்பனவுக்கான நிலுவையின் கீழ் வருபவவையாகும். நடைமுறையற்ற பொறுப்புகள், அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் கொடுப்னவுக்கான நிலுவையின் கீழ் வருகின்ற மீதிகளாகும். அறியப்பட்ட அனைத்துப் பொறுப்புகளும் இந் நிதிக் கூற்றுகள் தயாரிப்பதற்காக கணக்கிற் கொள்ளப்பட்டுள்ளன.

ஏதிர்கால நிகழ்வொன்றின் விளைவாக, கூட்டுத்தாபனம் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடப்படக்கூடிய தற்போதய சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாட்டினை கொண்டிருக்குமெனில் அத்துடன் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு வேண்டப்பட்ட பொருளாதார நலன்களின் வெளிப்பாய்ச்சலொன்று நிகழத்தக்கதாக இருக்குமெனில் ஏற்பாடொன்று அடையாளப்படுத்தப்படுகின்றது.

## 13. பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்புகள்

நிரந்தரச் சொத்துகள் நிதியளித்தல் தொடர்பில் அரசாங்கத்திடம் இருந்த கிடைக்கப்பெற்ற அனைத்து தொகைகளினதும் மொத்ததினை ஒன்றுதிரட்டிய நிதி உள்ளடக்குகின்றது.

## 14. கடன் பெறுதல்

கடன்பெறுதல்கள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில், ஏற்பட்ட தேறிய கொடுக்கல் வாங்கல் செலவில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கடன்பெறுதல்கள், அதனைத்தொடர்ந்து கடன்கழிக்கப்பட்ட செலவிற்கு கொண்டு செல்லப்படுகின்றன.

## 15. ஊழியர் நலன்கள்

### வரையறை செய்யப்பட்ட நலத்திட்டம்

அனைத்து உரித்துடைய ஊழியர்களுக்கும் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் வேண்டப்பட்டவாறு வரையறை செய்யப்பட்ட நலத்திட்டமொன்றினை கூட்டுத்தபனம் பின்பற்றுகின்றது. வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாடானது இலங்கை கணக்கீட்டு நியமம் 19: ஊழியர் நலன்கள் இல் விதந்துரைக்கப்பட்டவாறு எதிர்வு கூறப்பட்ட அலகு வரவு முறையினைப் பயன்படுத்தி கம்பனியினால் வருடாந்தம் கணிக்கப்படுகின்றது.

## 16. வருவாய் அடையளப்படுத்தல்

பொருளாதார நலன்கள் கூட்டுத்தாபனத்திற்கு வரும் என்ற நிகழ்வு காணப்படுகின்ற ரீதியில் அத்துடன் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டு வருகின்றமையினை கருத்திற்கொள்ளாது வருமானம் நம்பகமாக அளவிடப்படக் கூடியதாகவிருக்கின்றபோது வருவாய் அடையளப்படுத்தப்படுகின்றது.

## 17. வருவாய் செலவினம் அடையாளப்படுத்தல்

குறித்த வருமானமொன்றிற்கு ஏற்பட்ட செலவு மற்றும் ஆதாயம் என்பவற்றுக்கிடையிலான நேரடியாக தொடர்புபட்ட அடிப்படை யொன்றின் மீது விரிவான வருமானக் கூற்றில் செலவுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. வினைத்திறன் மிக்கவாறு வியாபாரத்தினை தொழிற்படுத்தல், மூலதனச் சொத்துகளை பராமரித்தல் என்பவற்றில் ஏற்பட்ட அனைத்து செலவினமும் ஆண்டுக்கான இலாப நட்டக் கணிப்பில் வருவாயில் அறவிடப்படுகின்றன.

## 18. வரிச் செலவுகள்

வருமான வரிச் செலவானது நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது.

**இலங்கை ஆயர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்**
**நிதியல் நிலைக் கூற்று**
**2013 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு**

| | 31.12.2013 | 31.12.2012 |
|---|---|---|
| **சொத்துகள்** | ரூபா. சதம் | ரூபா. சதம் |
| **நடைமுறையற்ற சொத்துகள்** | | |
| ஆதனம், பொறித்தொகுதி உபகரணங்கள் | 155,081,533.27 | 160,907,541.43 |
| முன்னெடுக்கப்படும் பணி | 71,492,032.38 | 29,697,763.91 |
| ஏனைய நிதிச் சொத்துகள் | | |
| ஊழியர் கடன்கள் | 7,555,483.69 | 7,081,084.34 |
| பிற்போடப்படட்ட வரிவிதிப்பு | 9,876,643.19 | 9,833,002.11 |
| | 244,005,692.53 | 207,519,391.79 |
| **நடைமுறைச் சொத்துகள்** | | |
| பொருட்பதிவேடு | 144,256,841.12 | 141,265,798.23 |
| இடமாற்றில் உள்ள கையிருப்பு | 2,869,330.42 | 1,053,552.67 |
| ஊழியர் கடன்கள் | 10,404,303.21 | 9,447,929.32 |
| தங்க கையிருப்பு | 5,561,695.00 | 5,561,695.00 |
| பிணையக் கணக்கு | 3,874,335.00 | 1,232,247.00 |
| வதியாதோர் வெளிநாட்டுக் நாணயக் கணக்கு | 715,192.62 | 678,756.59 |
| நானாவித வைப்புகள் | 3,397,502.00 | 3,534,002.00 |
| நிலையான வைப்புகளில் குறகிய கால முதலீடு | 71,577,603.50 | 66,701,024.35 |
| வர்த்தக கடன்படுநர் | 86,767,038.00 | 67,726,194.00 |
| முற் கொடுப்பனவுகளும் முற்பணங்களும் | 11,976,280.28 | 21,368,278.67 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 38,443,990.32 | 48,329,078.36 |
| | 379,844,111.47 | 366,898,556.19 |
| **மொத்த சொத்துகள்** | 623,849,804.00 | 574,417,947.97 |
| **நிதியங்களும் பொறுப்புகளும்** | | |
| **பங்களிப்புக்கள்** | | |
| ஒப்பிய மூலதனம் | 5,000,000.00 | 5,000,000.00 |
| | 5,000,000.00 | 5,000,000.00 |
| **புற பங்களிப்பு** | | |
| பொதுத் திறைசேரி | 238,038,210.00 | 235,038,210.00 |
| உலக சுகாதார அமைப்பு | 3,994,341.00 | 3,994,341.00 |
| ஆயர்வேத பரிசோதனை நிறுவகம் | 761,274.00 | 761,274.00 |
| | 242,793,825.00 | 239,793,825.00 |
| **வருவாய்** | | |
| மூலதன ஒதுக்கு | 1,923,741.00 | 1,923,741.00 |
| மீள் விலை மதிப்பீட்டு ஒதுக்கு | 5,522,790.00 | 5,522,790.00 |
| வெளிநாட்டு நாணய இணக்க ஒதுக்குகள் | 19,523.00 | 19,523.00 |
| முன்னைய வருட சீராக்கல்-(பொதிக்கு ஏற்ப) | 38,613,358.47 | 37,535,285.60 |
| எனைய விரிவான வருமானம் | 2,751,742.08 | 3,094,830.88 |
| பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு | 191,546,841.94 | 160,568,264.44 |
| | 240,377,996.49 | 208,664,434.92 |
| | 488,171,821.49 | 453,458,259.92 |
| **பொறுப்புகள்** | | |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | |
| ஏற்பாடுகளுக்கான ஒதுக்கீடு | 4,193,014.00 | 3,491,314.00 |
| வங்கிகடன் | 56,000,000.00 | 60,000,000.00 |
| ஓய்வூதிய கலக் கடப்பாடுகள் | 25,300,199.27 | 23,013,461.08 |
| | 85,493,213.27 | 86,504,775.08 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| வர்த்தக கடன் கொடுநர் | 12,069,275.00 | 2,582,918.00 |
| முற்பண பெறுகை | 417,585.00 | 164,000.00 |
| சேர்ந்த செலவுகள் | 11,736,530.24 | 9,479,243.98 |
| கேள்வி பிணை வைப்பு | 2,929,197.00 | 3,033,562.00 |
| செலுத்தத்தக்க வைப்புகள் | 185,361.00 | 203,161.00 |
| செலுத்தத்தக்க ஊழியர் பிணை வைப்புகள் | 212,813.00 | 206,813.00 |
| வருமான வரி ஏறபாடுகள் | 22,634,008.00 | 18,785,215.00 |
| | 50,184,769.24 | 34,454,912.98 |
| **மொத்த நிதியங்கள் பொறுப்புகளும்** | 623,849,804.00 | 574,417,947.98 |

**இலங்கை ஆயர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்**
**விரிவான வருமானக் கூற்று**
**2013 டிசம்பர 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| | 2013<br>ரூபா. சதம் | 2012<br>ரூபா. சதம் |
|---|---|---|
| விற்பனை | 425,450,179.00 | 396,216,099.09 |
| கழிக்குக: விற்பனைச் செலவுகள் | 265,720,560.15 | 246,607,243.87 |
| **மொத்த இலாபம்** | 159,729,618.85 | 149,608,855.22 |
| ஏனைய வருமானம் | 12,611,164.82 | 27,082,235.85 |
| | 172,340,783.67 | 176,691,091.07 |
| கழிகுக: நிருவாக மற்றும் நிறுவனச் செலவுகள் | 77,822,750.63 | 80,407,686.73 |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | 49,558,421.16 | 36,833,724.50 |
| | 127,381,171.79 | 117,241,411.23 |
| **தொழிற்படுத்ல் செயற்பாடுகளில் இருந்து மிகை.** | 44,959,611.88 | 59,449,679.84 |
| தேறிய நிதி வருமானம்.'. (செலவுகள்) | (2,703,943.46) | 3,281,712.24 |
| **வரிக்கு முந்திய தேறிய மிகை** | 42,255,668.42 | 62,731,392.08 |
| கழிக்குக: வருமான வரிச் செலவுகள் | 11,277,090.92 | 26,136,699.45 |
| **வரிக்கு பிந்திய தேறிய மிகை** | 30,978,577.50 | 36,594,692.63 |
| **ஏனைய விரிவான வருமானம்** | | |
| வரையறுக்கப்பட்ட நலத்திட்டம் காப்பீட்டுக் கணிப்பு பெறுகை.'.(இழப்பு) | (343,088.80) | 3,094,830.88 |
| **ஆண்டுக்கான மொத்த ஏனைய விரிவான வருமானம்** | (343,088.80) | 3,094,830.88 |
| **ஆண்டுககான மொத்த விரிவான வருமானம்** | 30,635,488.70 | 39,689,523.51 |

**இலங்கை ஆயர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்**
**உற்பத்திச் செலவு பற்றிய கூற்று**
**2013 டிசம்பர 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| | 2013 | 2012 |
|---|---|---|
| **மூலப் பொருட்கள் நுகர்வு** | ரூபா. சதம் | ரூபா. சதம் |
| ஆரம்பக் கையிருப்பு | 68,058,659.00 | 45,863,857.00 |
| கூட்டுக: உள்நாட்டுக் கொள்வனவு | 136,605,366.00 | 156,340,938.00 |
| இறக்குமதி | 384,546.00 | 2,789,328.00 |
| | 205,048,571.00 | 204,994,123.00 |
| கழிக்குக: கையிருப்பு சேதம்: | - | 33,510.00 |
| | 205,048,571.00 | 204,960,613.00 |
| கழிக்குக: இறுதிக் கையிருப்பு | 51,129,741.00 | 68,058,659.00 |
| **மூலப் பொருட்கள் நுகர்வுச் செலவு** | 153,918,830.00 | 136,901,954.00 |
| **பொதியிடல் பொருட்கள் கொள்வனவு** | | |
| ஆரம்பக் கையிருப்பு | 11,357,499.00 | 10,459,770.00 |
| கூட்டுக: கொள்வனவு | 22,242,376.00 | 21,902,198.00 |
| | 33,599,875.00 | 32,361,968.00 |
| கழிக்குக: இறுதிக் கையிருப்பு | 10,684,760.00 | 11,357,499.00 |
| **பொதியிடல் பொருட்கள் கொள்வனவு செலவு** | 22,915,115.00 | 21,004,469.00 |
| தொழிலாளர் செலவினம் | 49,705,875.01 | 40,662,337.08 |
| ஆரம்ப எரிந்த எண்ணெய்க் கையிருப்பு | 762,190.00 | 498,865.00 |
| ஏனைய நேரடிச் செலவினம் | 13,571,920.00 | 11,942,395.00 |
| கழிக்குக: இறுதி எரிந்த எண்ணெய்க் கையிருப்பு | 252,000.00 | 762,190.00 |
| | 63,787,985.01 | 52,341,407.08 |
| **முதன்மைச் செலவுகள்** | 240,621,930.01 | 210,247,830.08 |
| **தொழிற்சாலை மேலதிகச் செலவு** | | |
| கூட்டுக: ஆரம்ப முடிவுறுத்தப்படாதவை | 6,251,170.26 | 4,409,278.00 |
| நேரடியற்ற செலவுகள் | 40,843,311.63 | 41,153,681.78 |
| கழிக்குக: இறுதி முடிவுறுத்தப்படாதவை | 9,071,213.00 | 6,251,170.26 |
| | 38,023,268.89 | 39,311,789.52 |
| விரிவான வருமானக் கூற்றுக்கு முன் கொண்டு சென்ற ஆண்டின் மொத்த தயாரித்தல் செலவு | 278,645,198.90 | 249,559,619.59 |

**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்**

**காசுப் பாய்ச்சல் கூற்று**

**2013 டிசம்பர 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| | 2013 | 2012 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| **தொழிற்படுத்தல் செயற்பாடுகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிவதிப்பிற்கு முன்னர் தேறிய இலாபம் | 42,255,668.42 | 62,731,392.08 |
| **சீராக்கல்கள்** | | |
| ஏற்பாடுகளுக்கான ஒதுக்கீடு | 701,700.00 | 246,858.00 |
| பெறுமானத் தேய்வு | 11,765,787.23 | 11,731,888.74 |
| கட்டடங்கள் மீதான வற்று அகற்றல் இழப்பு | - | 2,131,823.99 |
| தேறிய தொழிற்படா வருமானம் | (3,762,925.00) | (9,156,553.36) |
| ஊழியர் நலன் சீராக்கல் | 3,301,569.39 | 3,259,099.59 |
| தங்க கையிருப்பு மீள் விலை மதிப்பீடு | - | (3,720,050.00) |
| | 54,261,800.04 | 67,224,459.04 |
| **பணியாற்று மூலதன மாற்றத்தியற்கு முன்னர் இலாபம்** | | |
| பொருட் பதிடே (அதிகரிப்பு).˙.குறைவு | (2,991,042.89) | (27,496,071.23) |
| இடமாற்றில் உள்ள பொருட்பதிவேட்டில் (அதிகரிப்பு).˙.குறைவு | (1,815,777.75) | (784,386.67) |
| ஊழியர் கடன்களில் (அதிகரிப்பு).˙.குறைவு | (1,430,773.24) | (742,169.11) |
| முற் கொடுப்பனவு மற்றும் முற்பணங்களில் (அதிகரிப்பு).˙.குறைவு | 9,391,998.39 | (19,396,212.64) |
| நானாவித வைப்புகளில் (அதிகரிப்பு).˙.குறைவு | 136,500.00 | (334,000.00) |
| வர்த்தக கடன்படுநர்களில்(அதிகரிப்பு).˙.குறைவு | (19,040,844.00) | 4,445,262.00 |
| வர்த்தக கடன் கொடுநர்களில்(அதிகரிப்பு).˙.குறைவு | 9,486,357.00 | (5,985,505.00) |
| கணக்கீட்டுப் பொதி நிறுத்தி வைத்தலில் (அதிகரிப்பு).˙.குறைவு | 1,078,072.87 | (721,614.95) |
| முன் ஆண்டு பெறுகைகளில்(அதிகரிப்பு).˙.குறைவு | 253,585.00 | (76,000.00) |
| கேள்வி பிணை வைப்புகளில் (அதிகரிப்பு).˙.குறைவு | (104,365.00) | 2,424,050.00 |
| செலுத்தப்படத்தக்க வைப்புகளில்(அதிகரிப்பு).˙.குறைவு | (17,800.00) | 107,369.29 |
| செலுத்தப்படத்தக்க ஊழயர் பிணை வைப்புகளில் (அதிகரிப்பு).˙.குறைவு | 6,000.00 | 133,576.00 |
| சேர்ந்த செலவுகளில் (அதிகரிப்பு).˙.குறைவு | 259,852.26 | (584,961.49) |
| | 49,473,562.68 | 18,213,795.24 |
| கழி: செலுத்தப்பட்ட பணிக்கொடை | (1,069,500.00) | (573,661.90) |
| செலுதத்ப்பட்ட வரி | (2,000,000.00) | (5,536,364.00) |
| ***தொழிற்படுத்தல் செயற்பாடுகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல்*** | 46,404,062.68 | 12,103,769.34 |
| **முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| சொத்துகள் கொளவனவு | (5,939,779.07) | (131,413,983.16) |
| முன்னெடுக்கப்படும் பணியில் முதலீடு | (41,794,268.47) | (5,251,945.91) |
| நிரந்தர வைப்புகளில் முதலீடு | (4,876,579.15) | (40,758,815.32) |
| பிணையக் கணக்கில் முதலீடு | (2,642,088.00) | (1,210,022.00) |
| வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் முதலீடு | (36,436.03) | (266,535.59) |
| ***முலீட்டுச் செயற்பாடுகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல்*** | (55,289,150.72) | (178,901,301.98) |
| **நிதியியல் செயற்பாடுகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெற்றவை | 3,000,000.00 | 106,000,000.00 |
| அளிப்பு.˙.(மீள் செலுத்தத்தக்க) வங்கிக் கடன் | (4,000,000.00) | 60,000,000.00 |
| **நிதியியல் செயற்பாடுகளில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | (1,000,000.00) | 166,000,000.00 |
| காசு மற்றும் காசுக்கு நிகரானவற்றில் தேறிய அதிகரிப்பு (குறைவு) | (9,885,088.04) | (797,532.64) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு நிகரானவையம் | 48,329,078.36 | 49,126,611.00 |
| ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு நிகரானவையம் | 38,443,990.32 | 48,329,078.36 |

| | 2013 | 2012 |
|---|---|---|
| கையில் உள்ள காசு | ரூபா சதம் | ரூபா சதம் |
| மக்கள் வங்கி - கங்கொடவில க இ இல். 97100-182315453 | 15,116,387.58 | 26,124,387.09 |
| மக்கள் வங்கி - கங்கொடவில க இ இல்.. 97100-272315453 | 5,519,183.66 | 6,992,520.57 |
| இலங்கை வங்கி, நிறுவனக் கிளை க. இல.00001209 | 17,448,419.08 | 15,212,170.70 |
| சேமிப்புக் கணக்கு | 360,000.00 | - |
| | 38,443,990.32 | 48,329,078.36 |

## சம பங்கு மாற்றங்களின் அறிக்கை 2013
## (STATEMENT OF CHANGES IN EQUITY FOR 2013)

| விபரங்கள் | பங்களிப்பு மூலதனம் (ரூ) | பொதுத்திறைசேரி (ரூ) | உலக சுகாதார அமைப்பு (ரூ.) | அமைச்சு மற்றும் அரச நிறுவனங்கள்(ரூ.) | மூலதனக் குழாம் (ரூ.) | மீள் மதிப்பீடு குழாம் (ரூ.) | கணனி பொதியின் அமைவாக குழாம்(ரூ.) | வெளிநாட்டு செலாவணி சமப்படுத்தும் குழாம் (ரூ.) | இலாபநட்ட கணக்கு (ரூ.) | ஏனைய விபரங்கள் இலாபம் (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2012.12.31திகதியன்று மீதி | 5,000,000 | 235,038,210 | 3,994,341 | 761,274 | 1,923,741 | 5,522,790 | 37,535,286 | 19,523 | 160,568,264 | 3,094,831 | 450,363,429 |
| ஆண்டின் சீராக்கல் | | 3,000,000 | | | | | 1,078,073 | | 30,978,578 | (343,089) | 34,713,562 |
| 2013.12.31 திகதியன்று மீதி | 5,000,000 | 238,038,210 | 3,994,341 | 761,274 | 1,923,741 | 5,522,790 | 38,613,358 | 19,523 | 191,546,842 | 2,751,742 | 485,076,991 |

## கணக்குகளுக்கான குறிப்புகள்

1. 2013.12.31 அன்று உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் வர்த்தக மற்றும் ஏனைய கையிருப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1. | மூலப் பொருட்கள் கையிருப்பு (கிரயம்) | ரூபா 51,129,741.35 |
| 2. | செய்து முடித்த மருந்துக் கையிருப்பு (கிரயம்) | ரூபா 71,896,683.52 |
| 3. | பொதியிடல் கையிருப்பு (கிரயம்) | ரூபா 10,684,760,06 |
| 4. | செய்து முடிக்காத கையிருப்பு (கிரயம்) | ரூபா 9,071,213,23 |
| 5. | காகிதாதிகள் கையிருப்பு (கிரயம்) | ரூபா 531,983.41 |
| 6. | எரிந்த எண்ணெய் கையிருப்பு (கிரயம்) | ரூபா 252,000.00 |
| 7. | இயந்திர உதிரிப் பாகங்கள் கையிருப்பு | ரூபா 583,834.50 |
| 8. | நலனோம்புகைப் பொருட்கள் | ரூபா 106,625.05 |

2. 2013.12.31 இல் முடிவுற்ற ஆண்டுக்காக கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 650,000.00 ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. இவ் ஆண்டின் போது கூட்டுத்தானத்தின் இலாபத்தின் மீது வருமான வரியாக ரூபா 11,320,732.00 கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

4. ஆறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறு பின்வரும் வழக்காடல்கள் முடிவுறாதுள்ளன.

| **திறத்தவர்** | **புதவி** | **வழக்கு இல.** | **நீதிமன்றம்** | **குற்றத்தின் தன்மை** |
|---|---|---|---|---|
| திரு. எம். கே சோமதாச | களஞ்சியக் காப்பாளர் | W/P/HCCRMT/78/07 F | உயர் நீதிமன்றம் | 55 ஆவது வயதில் ஓய்வு |
| திரு. எஸ் எல் கேகிரிதெனிய | முகாமையாளர்-வழங்கல் | HC/ALT/02/2011 | மேல் நீதிமன்றம்-கொழும்பு | தொழில் நியாய சபைக்கெதிரானது. |
| திரு. ஆர் எம் லங்காதிலக | பாதுகாப்பு அலுவலர் | HC3755/07 | மேல் நீதிமன்றம்-கொழும்பு | நடமாடும் விற்பனையில் காசு மோசடி |
| மெட்சமா கொமரன் பிரைவட் லிமிடட் | வழங்குநர் | ARB/229/2013 மற்றும் ARB/162/2013 | வர்த்தக மேல் நீதிமன்றம்- | நிராவி கொதிகலனுக்காக செலுத்தத் தக்கது. |

5. மூலப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்வதற்காக இலங்கை ஆயர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் மக்கள் வங்கியின் கங்கொடவில கிளையுடன் நாணயக் கடிதம் ஊடாக உடன்படிக்கைகளைச் செய்துள்ளது,

6. கூட்டுத்தானத்திற்கு உரித்தான தங்க கையிருப்பு 2013.11.28 அன்று இலங்கை மத்திய வங்கியின் சர்வதேசக் கிளையில் உள்ள விலை மதிப்பீட்டாளரினால் அப்போது நிலவிய விகிதத்தினை அடிப்படையாக கொண்டு ரூபா 5,561,695.00 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் காணப்படும் குறிக்கப்பட்ட இலாபமானது கணக்கீட்டுக் கொள்கைகளை அடிப்படையாக கொண்டு கணிக்கப்பட்ட இலாபாக குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

7. விற்பனை வருவாய் என்பது விலைக்கழிவுகள் கழிக்கப்பட்ட பின்னர் தேறிய விற்பனை ஆகும்.

8. 2012.12.31 அன்று உள்ளவாறு தொல்பொருளியல் பெறுமதியுடன் 01, 02 ஆம் களஞ்சிய சாலைகளில் பின்வரும் பொருட்கள் காணப்படுவதுடன் அவசரமாக விலைமதிப்பிட முடியாதுள்ளது. களஞ்சியசாலையில் காணப்படும் நாட்டுக்குரிய பொருட்கள் பின்வருமாறு. 2012. டிசம்பர் 31 அன்று உள்ளவாறு அலகுகளாக காட்டப்பட்ட வற்றில் இப் பொருட்கள் சீராக்கப்டவில்லை.

| | |
|---|---|
| முத்துச் சிப்பிகள் (கிகி) | 36.100 |
| மான் கொம்புகள்(கிகி) | 52.400 |
| கஸ்தூரி வில்லைகள் | 23.000 |
| தூய சலவைக்கல் (கிகி) | 4.400 |
| கருமை நீர்ம பட்டை | 2.900 |
| வெள்ளி நாகம் (கிகி) | 0.150 |
| வெண்மை ஈயம் | 16.80 |
| பித்தளை தட்டுகள் (கிகி) | 2.5 |

9. சுதேச வைத்திய அமைச்சு மற்றும் ஆயர்வேத திணைக்களம் என்பளவற்றுக்கு உரித்தான பல மூலிகைத் தோட்டங்கள் கூட்டுத்தாபனத்திடம் தற்காலிகமாக கையளிக்கப்பட்டுள்ளன. அவற்றின் சொத்துகள் கூட்டுத்தானத்தினால் தற்காலிகமாக பொறுப்பேற்கப்பட்டுள்ளதுடன் தற்போது கூட்டுத்தாபனம் மூலிகை தோட்ட கருத்திட்டங்களை விரிவுபடுத்துகின்றது. அவற்றின் உற்பத்தி கூட்டுத்தாபனத்தில் மருந்து தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

10. கூட்டுத்தாபனத்தினால் அதன் வழங்கல் முகாமையாளர் திரு. எஸ். ஏல் கெகிரிதெனிய என்பவருக்கெதிராக் கோவைப்படுத்தப்பட்ட வழக்கின் தீர்ப்பிலிருந்து கணக்கீட்டின் தொடர்புடைய காலப்பதுதியன் போது எதிர்பாரா பொறுப்புகளின் கீழ் ஒதுக்கீடுகளாக கணக்கிடப்பட்ட அவ் அலுவலருக்கான எஞ்சிய தொகை நட்டஈடாக செலுத்தப்படத்தக்க ரூபா 2,380,500.00 கூட்டுத்தாபனத்திற்கெதிராக விதிக்கப்பட்டது.

11. கூட்டுத்தாபனத்தில் மருந்து தயாரிப்பதற்காக அளிப்பாக நீதிமன்றத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மூலப்பொருட்கள், இவ் ஆண்டின்போது மூலப்பொருள் கொள்வனவாக, குறைந்த கேள்வி விலையில் நானாவித வருமானமாக கணிக்கப்பட்டுள்ளது.

12. சுதேச மருத்துவ அமைச்சுக்கு சொந்தமான LC 9184 ஆம் இலக்க லொறி கூட்டுத்தாபனத்தில் மருந்து விநியோகிப்பதற்கு பயன்னடுத்ப்பட்டு வருகிறது.

13. செய்து முடிக்கப்பட்ட பொருட்கள் களஞ்சியங்கள் தொழிற்சாலைக்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ளமையினால், தொடர்புடைய ஊழியர் சம்பளங்களும் மேலதிக நேர செலவுகளும் விற்பனை மற்றும் விநியோக செலவுகளின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளன.